**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No. 134/2019**

**RW.1.**

*****

2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 10- ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1983 ம் ஆண்டின் 105-வது சட்டம் ஏற்பாட்டின் படி திருமதி.S. மோகன ரம்யா., பி.ஏ., பி.எல்., தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சஞ்சீவிகுமார் | **தகப்பனார் பெயர்** | : | தங்கபாண்டியன் |
| **கிராமம்** | : | | **தாலுகா** | : | மதுரை |
| **தொழில்** | : | இளநிலைஉதவியாளர் வட்டார போக்குவரத்து அலுவலகம் மதுரை வடக்கு | **வயது** | : | 27/2026 |

---

**முதல் விசாரணை**

**22.07.2026**

நான் தற்போது மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலைஉதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் வட்டார போக்குவரத்து அலுவலர் சாட்சியம் அளிக்க சாட்சி சம்மன் சார்பு ஆகி உள்ளது. அவர் சார்பாக என்னை சாட்சியம் அளிக்குமாறு அங்கீகார கடிதம் வழங்கி உள்ளார். அது **எ.ம.சா.ஆ.1** ஆகும்.

எங்களது அலுவலத்திற்கு வந்த சமூக நீதிமன்ற அழைப்பாணையில் TN 64 A0581 என்ற நான்கு சக்கர இண்டிகா வாகனத்தின் தகுதி சான்று அனுமதி சான்று , பதிவு சான்று, காப்பீட்டு சான்று ஆகியவற்றை கோரியும் தாவா விபத்து சமயம் ஓட்டிச்சென்ற செந்தில் குமார் த.பெ. சரவணன் , க.எண். 6/222, அங்கையர் கண்ணி காலனி , ஆத்திகுளம், மதுரை என்ற நபரின் ஓட்டுநர் உரிமம் சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் கோரியிருந்ததது. மேற்கண்ட 4 சக்கர வாகனத்தின் அனுமதி சான்றானது

24.02.2015 முதல் 23.02.2020 வரை அமலில் இருந்தது. மேற்படி அனுமதி சான்று **எ.ம.,சா.ஆ. 2** ஆகும். மேற்கண்ட வாகனத்தின் தகுதி சான்றானது 05.01.2017 முதல் 04.01.2018 வரை அமலில் இருந்தது. மேற்படி தகுதி சான்று **எ.ம.சா.ஆ. 3** ஆகும். மேற்கண்ட வாகனத்தின் காப்பீட்டு சான்றானது 31.01.2016 முதல் 30.01.2017, வரை அமலில் இருந்தது. மேற்படி காப்பீட்டு சான்று **எ.ம.சா.ஆ. 4** ஆகும். மேற்சொன்ன எ.ம.சா.ஆ,. 2 முதல் எ.ம.சா.ஆ. 4 வரையிலான ஆவணங்கள் 27.01.2017 விபத்து தேதிக்கு உட்பட்டது என்றால் சரிதான். **TN 64 A0581** என்ற நான்கு சக்கர இண்டிகா வாகனத்தின் உரிமையாளர் திரு. செந்தில்குமார் என்றால் நான் பதிவு சான்றை பார்த்து தான் சொல்ல முடியும். அதனை நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை.மேற்சொன்ன திரு . செந்தில் குமார் ஓட்டுநர் உரிமம் சம்பந்தபட்ட ஆவணங்களை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். அது முறையே **எ.ம.சா.ஆ. 5** ஆகும். எ.ம.சா.ஆ. 5 ன் படி 27.01.2017 தேதியில் திரு. செந்தில் குமார் அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. **TN 64 A0581** என்ற நான்கு சக்கர இண்டிகா வாகனம் வாடகை கார் வாகனமாகும். திரு. செந்தில்குமாருக்கு சொந்த வாகனம் ஓட்டுவதற்கு டிரான்போர்ட் வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இருந்தது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

விபத்து சமயத்தில் 1ம் எதிர் மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் **TN 64 A0581** என்ற நான்கு சக்கர இண்டிகா வாகனத்திற்கு முறையே காப்பீடு இருந்தது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

(sd/- S.Mohana Ramya)
தலைமைக் குற்றவியல் நடுவர்,
சிவகங்கை.